## யூலை – 04 – புதன்

### புனித எலிசபெத்

### “தம் வழியை செம்மைப்படுத்துவோர் கடவுளாம் நான் அருளும் மீட்பைக் கண்டடைவர்” (தி.பா. 50:23)

### முதல் வாசகம் : ஆமோஸ் 5:14–15,21– 24

ஆண்டவர் கூறுவது நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள் அப்பொழுது நீங்கள் சொல்வதுபோல படைகளின் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடு இருப்பார். தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள் நகர் வாயிலில் நீதியை நிலைநாட்டுங்கள் அப்பொழுது ஒருவேளை படைகளின் கடவுளாகிய ஆண்டவர் யோசேப்பின் வீட்டாரில் எஞ்சியிருப்போர்க்கு இரக்கம் காட்டுவார். உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன் உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை. எரிபலிகளையும் தானியப் படையல்களையும் எனக்கு நீங்கள் செலுத்தினாலும் நான் ஏற்க மாட்டேன் கொழுத்த விலங்குகளை நல்லுறவுப் பலிகளாகச் செலுத்தும்போது நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன். என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள், உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன். மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுள் தரும் மீட்பைக் கண்டடைவர்.

### நற்செய்தி : மத்தேயு 8 : 28 – 34

அக்காலத்தில் இயேசு கலிலேயாவின் மயநுகரையை அடைந்து கதரேனர் வாழ்ந்த பகுதிக்கு வந்தபோது, பேய்பிடித்த இருவர் கல்லறைகளிலிருந்து வெளியேறி அவருக்கு எதிரே வந்துகொண்டிருந்தனர். அவ்வழியே யாரும்போகமுடியாத அளவுக்கு அவர்கள் மிகவும் கொடியவர்களாய் இருந்தார்கள்.அவர்கள், ”இறை மகனே, உமக்கு இங்கு என்னவேலை? குறித்தகாலம் வரும்முன்னே எங்களை வதைக்கவா இங்கேவந்தீர்?” என்று கத்தினார்கள். அவர்களிடமிருந்து சற்றுத்தொலையில் பன்றிகள் பெருங்கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. பேய்கள் அவரிடம், ”நீர் எங்களை ஓட்டுவதாயிருந்தால் அப்பன்றிக் கூட்டத்திற்குள் எங்களை அனுப்பும்” என்றுவேண்டின.அவர் அவற்றிடம், ”போங்கள்” என்றார். அவை வெளியேறிப் பன்றிகளுக்குள் புகந்தன. உடனே அக்கூட்டம் முழுவதும் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து நீரில் வீழ்ந்து மடிந்தது.பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிப்போனார்கள். அவர்கள் நகருக்குள்சென்று, பேய் பிடித்தவர்களைப் பற்றிய செய்தியையும், நடந்த அனைத்தையுமே அறிவித்தார்கள்.உடனே நகரினர் அனைவரும் இயேசுவுக்கு எதிர்கொண்டு வந்து, அவரைக் கண்டு தங்கள்பகுதியை விட்டு அகலுமாறு வேண்டிக்கொண்டனர்.

**தியானம்:** இறைவனுடைய வார்த்தையில் நாம் நம்பிக்கை கொண்டு இறைசித்ததிற்கு எம்மை அர்ப்பணித்து வாழ இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைக்கின்றன. இறைவன் அளப்பரிய இரக்கமுடையவர் அவரது இரக்கத்தால் பாவிகளாகிய நாம் மீட்கப்பட்டோம். இந்த இரக்கத்தை தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவரில் நம்பிகையுள்ளவர்களாக நடக்கவேண்டும். நற்செய்தியில் இயேசு கதரேனர் வாழ்ந்த பகுதியில் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்ட இருவருக்கு விடுதலை கொடுத்ததைப் பார்க்கின்றோம்.. இன்று சாத்தானவன் பலரை தனது கட்டுப்பாட்டுகள் வைத்து தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கிறான்.. உலக இச்சைகளான சுயநலம், கோபம், வைராக்கியம், பொறாமை, ஆணவம், போன்ற தீய எண்ணங்களினால் அடிமைப்படுத்த முயற்சிக்றின்றான். அலகையின் சோதனைகளை நாம் முறியடிக்க வேண்டுமாயின் இறைமகன் இயேசுவின் வல்லமையும், விசுவாசமும் நமக்குத் தேவை. மனிதமாண்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அன்புச் சீடர்களாக நாம் மாறவேண்டும். ஆகவே தான் “தீயோனுக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் இடம் கொடாது இயேசுவின் தூய ஆலயங்களாகநாம் வாழ்வோம்.